பிரஸார் பாரதி

அகில இந்தியவானொலி, சென்னை-4

09 06 2023**FRIDAY**7 15**AM**

வணக்கம், ஆகாஷவாணி-செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. செர்பியாவில் உள்ளவர்த்தகநிறுவனங்கள் இந்தியாவில் முதலீடுசெய்யமுன்வரவேண்டும் என்றுகுடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதிமுர்முகேட்டுக் கொண்டுள்ளார்.

2. பிரதமர் திரு. நரேந்திரமோடி, சவுதிஅரேபிய இளவரசர் சல்மான் பின் அப்துலாசிஸ் அல் சவுத்-துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, இருதரப்பு உறவுகள் குறித்துபேசினார்..

3. மணிப்பூரில் அமைதிதிரும்பியுள்ளதாகஅம்மாநிலஅரசுக்கானபாதுகாப்பு ஆலோசகர் திரு. குல்தீப் சிங் கூறியுள்ளார்..

4. ஆப்கானிஸ்தானில் நேற்றுநிகழ்ந்தகுண்டுவெடிப்பு சம்பவத்தில் 15 பேர் உயிரிழந்தனர்.

5. நெதர்லாந்தில் நடைபெற்றுவரும் ப்ரோஹாக்கிலீக் போட்டியில்இந்தியா 3-0 என்றகோல்கணக்கில் அர்ஜென்டினாவைவென்றது..

<<<<<<>>>>>>>

செர்பியாவில் உள்ளவர்த்தகநிறுவனங்கள் இந்தியாவில் முதலீடுசெய்யமுன்வரவேண்டும் என்றுகுடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதிமுர்முகேட்டுக் கொண்டுள்ளார்.

செர்பியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளஅவர், அந்நாட்டுஅதிபர் திரு. அலெக்சாண்டர் வவ்சிக்-கை நேற்றுசந்தித்துப் பேசியபின்னர், அவருடன் இணைந்துசெய்தியாளர்களிடம் பேசுகையில் இதனை தெரிவித்தார்.

அணிசேரா இயக்கம் தொடங்கப்பட்டதிலிருந்து இந்தியா—செர்பியா இடையிலானஉறவு பரஸ்பரநம்பிக்கை, பரஸ்பர புரிந்துணர்வு போன்றவற்றில் ஒருவருக்கொருவர் ஆதரவு என்றநிலையில் தொடர்வதாகஅவர் கூறினார்.

வர்த்தகம், முதலீடு, அறிவியல் தொழில்நுட்பம், டிஜிட்டல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் இந்தியா—செர்பியா இணைந்துசெயல்படுவதற்கானவாய்ப்புகள் உள்ளதாகஅவர் தெரிவித்தார்.

இந்தியர்கள், செர்பியாசென்றுவரவிசாவிதிமுறைகள் எளிதாக்கப்படும் என்று இந்தசெய்தியாளர் சந்திப்பில் உடனிருந்தசெர்பியஅதிபர் திரு. அலெக்சாண்டர் வவ்சிக் கூறினார்.

<<<<<<>>>>>>>

பிரதமர் திரு. நரேந்திரமோடி, சவுதிஅரேபிய இளவரசர் சல்மான் பின் அப்துலாசிஸ் அல் சவுத்-துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, இருதரப்பு உறவுகள் குறித்துபேசினார்.

சர்வதேசவிவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் தங்களதுகருத்துக்களைபறிமாறிக் கொண்டனர்.

சூடானில் சிக்கிய இந்தியர்களைபத்திரமாகமீட்பதற்குசவுதிஅரேபியஅளித்தஒத்துழைப்புக்குபிரதமர் திரு. நரேந்திரமோடிநன்றிதெரிவித்துக் கொண்டார்.

ஹஜ் புனிதப் பயணம் தொடங்கியுள்ளநிலையில், இந்தியர்களுக்குஅனைத்துவிதமானஉதவிகளும் சவுதிஅரேபியாசெய்துதரும் என்றுதாம் நம்புவதாகவும் பிரதமர் கூறினார்.

ஜி-20 அமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியாஏற்றுள்ளநிலையில், எடுக்கப்படும் அனைத்துமுயற்சிகளுக்கும் இந்தியாவுக்குஆதரவாகசவுதிஅரேபியாசெயல்படும் என்றும் விரைவில் இந்தியாவுக்குதாம் வருகைதரவிருப்பதாகவும் பிரதமரிடம், சவுதிஅரேபிய இளவரசர் தெரிவித்ததாகசெய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<<<>>>>>>>

ஜம்முவில் ஸ்ரீவெங்கடேஸ்வரசுவாமிகோவில் திறக்கப்பட்டிருப்பது, ஒரேபாரதம் உன்னதபாரதம் உணர்விற்குமேலும் வலுசேர்க்கும் என்றுபிரதமர் திரு. நரேந்திரமோடிகூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தைபதிவு செய்துள்ளஅவர், இது பாரம்பரியத்தின் செழுமையைகொண்டாடுவதாகஉள்ளதுஎன்றும் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>>

தீவிரவாதஅமைப்புகளின் செயல்பாடுகளுக்குகனடாஆதரவு அளித்தால், அது இந்தியாவுடனானஉறவில் பாதிப்பைஏற்படுத்தும் என்றுமத்தியஅரசுகூறியுள்ளது.

மறைந்தமுன்னாள் பிரதமர் இந்திராகாந்திபடுகொலைசெய்யப்பட்டதைகொண்டாடும் வகையில், கனடாவில் சிலதீவிரவாதஅமைப்புகள் நிகழ்ச்சிநடத்தியதைசுட்டிக்காட்டிகருத்துதெரிவித்துள்ளவெளியுறவுத்துறைஅமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர், பிரிவினைவாதிகளுக்கும், தீவிரவாதஅமைப்புகளுக்கும் கனடா இடம் தருவது, இருநாடுகளின் உறவில் பாதிப்பைஏற்படுத்தும் என்றுகூறியுள்ளார்.

700க்கும் மேற்பட்ட இந்தியமாணவர்களை இந்தியாவுக்குதிருப்பிஅனுப்பகனடாஎடுத்துள்ளமுடிவு சரியானதல்லஎன்றும், மாணவர்கள் தொடர்ந்துஅங்குபடிப்பதற்கு, அந்நாட்டுஅரசுஅனுமதிஅளித்திருக்கவேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

காதிகிராமதொழில் ஆணையத்தின் விற்பனைகடந்தஒன்பதுஆண்டுகளில் 332 சதவீதம் அதிகரித்துள்ளது.

சுயசார்பு இந்தியா இயக்கத்தின் கீழ், இந்தஆணையபொருட்களின் விற்பனை 1 லட்சத்து 34 ஆயிரம் கோடி ரூபாயைதாண்டியுள்ளது.

2014ஆம் ஆண்டுஇதன் விற்பனை 31 ஆயிரத்து 154 கோடி ரூபாய் என்றஅளவிற்கு இருந்ததாகமத்தியஅரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்தஆணையத்தின் மூலம் ஊரகப்பகுதிகளில் 9 லட்சத்திற்கும் மேற்பட்டவேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காதிவிற்பனையைஅதிகரிக்கபிரதமர் திரு. நரேந்திரமோடிமேற்கொண்டநடவடிக்கைகளேகாரணம் என்றும் காதிகிராமதொழில் ஆணையத்தின் தலைவர் திரு. மனோஜ்குமார் தெரிவித்துள்ளார்.

தற்போது, சர்வதேசஅளவில் காதிபொருட்கள் மக்களின் நம்பிக்கையைபெற்றதாகதிகழ்கிறதுஎன்றும் அவர் கூறினார்.

<<<<<<>>>>>>

ஹிமாச்சலப்பிரதேசத்தில் ஊரகப் பகுதிகளின் மேம்பாட்டிற்குஉயர் முன்னுரிமைஅளிக்கப்பட்டிருப்பதாகமுதலமைச்சர் திரு. சுக்விந்தர் சிங் சுஹூ கூறியுள்ளார்.

அம்மாநிலத்தின் **Kinnaur**கிராமத்தில் வசிப்பவர்களுடன், மத்தியஅமைச்சர் திரு. ஆர்.கே. சிங்குடன் இணைந்துகலந்துரையாடுகையில் அவர் இவ்வாறுதெரிவித்தார்.

பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகளைமேற்கொள்வதில், கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்றும் முதலமைச்சர் கூறினார்.

இந்தகலந்துரையாடலின் போது, திரு. ஆர்.கே. சிங் பேசுகையில், கிராமப் பகுதிகளின் மேம்பாட்டிற்கெனதிட்டம் ஒன்றைசெயல்படுத்தப்பட்டுவருவதாகதெரிவித்தார்.

இந்தகிராமங்களைமத்தியபொதுத்துறைநிறுவனங்கள் தத்தெடுத்துமேம்பாட்டுப் பணிகளைமேற்கொள்ளும் என்றும் திரு. ஆர்.கே. சிங் கூறினார்.

<<<<<<>>>>>>

இந்தியா–நியூஸிலாந்து இடையேயானமுதலாவதுவட்டமேசைமாநாடுநேற்று புதுதில்லியில் தொடங்கியது.

தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கானகூட்டமைப்பு பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் பேசியவர்த்தகத்துறைகூடுதல் செயலர் திரு. ராஜேஷ் அகர்வால்,இருநாடுகளுக்கு இடையேயானவர்த்தகஉறவைமேலும் வலுப்படுத்துவதற்குஎண்ணற்றவாய்ப்புகள் உள்ளதாககூறினார்.

இருநாடுகளுக்கு இடையிலான இணைவர்த்தக் குழுவின் நோக்கங்களைசெயல்படுத்துவதுகுறித்தும் இதில் விவாதிக்கப்பட்டது.

<<<<<<>>>>>>

மணிப்பூரில் அமைதிதிரும்பியுள்ளதாகஅம்மாநிலஅரசுக்கானபாதுகாப்பு ஆலோசகர் திரு. குல்தீப் சிங் கூறியுள்ளார்.

கடந்த 48 மணிநேரத்தில் எவ்விதவன்முறைச் சம்பவமும் நிகழவில்லைஎன்றுஅவர் செய்திநிறுவனம்ஒன்றுக்குஅளித்தபேட்டியில் தெரிவித்தார்.

வன்முறைச் சம்பவங்களால் இடம்பெயர்ந்தவர்களுக்குநிவாரணம் வழங்குவதற்காக 101 கோடியே 75 லட்சம் ரூபாயைமத்தியஅரசுஒதுக்கியுள்ளதாகஅவர் கூறினார்.

வன்முறையால் பாதிக்கப்பட்டபகுதிகளில், அதற்குகாரணமானவர்களிடமிருந்துஏராளமான ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மாநிலம் முழுவதும் பாதுகாப்புப் படையினர், மணிப்பூர் காவல்துறையினருடன் இணைந்துகண்காணிப்புப் பணிகளைமேற்கொண்டுவருவதாகவும் திரு. குல்தீப் சிங் கூறினார்.

<<<<<<>>>>>>

இனிமக்களின் மனதைவென்றமத்தியஅரசின் திட்டங்கள்.

*(சவுண்ட்பைட் - இசை– 10 செகண்ட்ஸ்)*

பிரதமர் திருநரேந்திரமோடிதலைமையிலானமத்தியஅரசுகடந்தஒன்பதுஆண்டுகளில் நிறைவேற்றியுள்ளபல்வேறுதிட்டங்கள் குறித்துஅகில இந்தியவானொலிசெய்திப்பிரிவு தொடர்ந்துதகவல்களைஅளித்துவருகிறது.

இதன் ஒருபகுதியாக இன்று இடம்பெறுவது, பிரதமரின் விவசாயிகள் ஆதரவு திட்டம்.

கரீப் பருவபயிர்களுக்கானகுறைந்தபட்சஆதரவு விலையைமத்தியஅரசுஉயர்த்தியுள்ளதால் வேளாண் விளைபொருட்களுக்குஉரியலாபம் கிடைக்கும் என்றுதிண்டுக்கல் மாவட்டவிவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

*(சவுண்ட் பைட் - விவசாயிகள் 55செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

திருநெல்வேலிவழியாக, முதல்முறையாகஐஆர்சிடிசிசார்பில் கொச்சுவேலியிலிருந்து, தில்லிவரைசெல்லும் பிரத்யேகசுற்றுலாரயில் இயக்கப்படுகிறது.

இந்தரயிலில் பயணிப்பவர்கள், ஹைதராபாத் சார்மினாரில் தொடங்கிசெங்கோட்டைவரை, ஏராளமானசுற்றுலாதலங்களைகண்டுகளிக்க முடியும் என்றுஐஆர்சிடிசியின் தென்மண்டலபொதுமேலாளர் திரு. ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலியில் நேற்றுஅவர் செய்தியாளர்களிடம் பேசினார்.

(சவுண்ட் பைட் - ரவிக்குமார் 35 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>

ஆப்கானிஸ்தானில் நேற்றுநிகழ்ந்தகுண்டுவெடிப்பு சம்பவத்தில் 15 பேர் உயிரிழந்தனர். 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பைசாபாத் மாகாணதற்காலிகஆளுநர் நிஸார் அஹமத் படுகொலைசெய்யப்பட்டதைஅடுத்து, அவரது இறுதிச்சடங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, இந்தகுண்டுவெடிப்பு சம்பவம் நிகழ்ந்தாகசெய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தசம்பவத்திற்கு ஐஎஸ் தீவிரவாதஅமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

<<<<<<>>>>>>>

நெதர்லாந்தில் நடைபெற்றுவரும் ப்ரோஹாக்கிலீக் போட்டியில் நேற்று, இந்தியா 3-0 என்றகோல்கணக்கில் அர்ஜென்டினாவைவென்றது.

<<<<<<>>>>>>>

ஆஸ்திரேலியாவுக்குஎதிரானஉலகடெஸ்ட் கிரிக்கெட் இறுதிப் போட்டியின் இரண்டாம் நாளானநேற்றுஆட்டநேர இறுதியில் இந்தியாமுதல் இன்னிங்ஸில் 5 விக்கெட் இழப்புக்கு 151 ரன் எடுத்திருந்தது.

ஆஸ்திரேலியாமுதல் இன்னிங்ஸில் 469 ரன்னுக்குஆட்டமிழந்தது.

<<<<<<>>>>>>>